290

அட்லாண்டிக் சாஸனம்

2929

13 FEB 1944

MADRAS

தி. ஜ. ர.

2

மின்னொளி பிரசுரம்

மின்னொளிப் பிரசுரம்—3

சோவியத் கொரில்லாப் போர்

இன்று ருஷியா வெற்றிக்கு மேல் வெற்றி பெறுவதன் ரகஸ்யம் என்ன? ருஷியாவின் மூல பலம் யாது? அதன் சமதர்ம வாழ்வு முறை தான்; அந்த வாழ்க்கையால், ருஷிய மக்கள் அடைந்திருக்கும் சுதந்தர உணர்ச்சி தான்.

ருஷியாவின் பிரம்மாண்டமான செஞ்சேனை ஒரு புறம் வீரமாய்ப் போராடுகிறது; மறுபுறம் ருஷிய மக்கள் சுயமாய்த் திரட்டிய கொரில்லாப் படைகள் அற்புதமாய்ப் போரிடுகின்றன.

அந்தக் கொரில்லாப் படைகள் எப்படி ஆரம்பித்தன, எவ்வாறு அமைகின்றன, எவ்வாறு ஆயுதம் சேகரிக்கின்றன, எம்முறையில் சண்டையிடுகின்றன, எத்தகைய தீரச் செயல்களைப் புரிகின்றன என்பதையெல்லாம் விளக்குகிறது இந்த நூல். குழந்தைகளும் பெண்களும்கூட என்ன ஆச்சர்யமான செயல்களைப் புரிகிறார்கள் என்பதை இதிலே காணலாம்.

எழுதியவர்: **வெ. ராமசாமி**

விலை அணா எட்டு

அட்லாண்டிக் சாசனம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1944
MADRAS

தி. ஜ. ர. வின் நூல்கள் :

எப்படி எழுதினேன்?
சந்தனக் காவடி
பொழுது போக்கு

வரலாறுகள் :

கோயரிங்
தீனபந்து ஆண்ட்ரூஸ்
புதுமைக் கவி பாரதி

மொழிபெயர்ப்பு :

கூண்டுக்கிளி
அபேதவாதம்

மின்னொளிப் பிரசுரம்—உ

அட்லாண்டிக் சாசனம்

சர்ச்சிலும் ரூஸ்வெல்டும்
வெளியிட்ட யுத்த லட்சியங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 FEB 1944
MADRAS

தி. ஜ. ரங்கனாதன்
ஆசிரியர் 'சக்தி'

712
355·094

சக்தி காரியாலயம்
சென்னை :: மதுரை

V16, 194

இந்த யுத்தம் தீர்ந்ததும் நிரந்தரமான சமாதானத்தை உலகத்தில் நிலைநாட்ட என்ன வழி? அதை விளக்கும் யுத்த லட்சியங்கள் அட்லாண்டிக் சாசனத்தில் இருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அந்தச் சாசனத்தால் உலக சமாதானம் நிரந்தரமாக ஏற்படுமா என்பதை இந்த நூலில் ஆராய்ந்திருக்கிறார் தி. ஜ. ர.

இது மின்னொளியின் இரண்டாவது பிரசுரம்

முதல் பதிப்பு ஜனவரி 7, 1944

உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை அணா எட்டு

யுத்தம் என்பது என்ன? அது ஏதோ ஒரு சிறிய நிமித்தத்தால் தோன்றலாம்; வியாஜம் மிகவும் அற்பமாகவே யிருக்கக்கூடும். ஆனல், பிரம்மாண்டமான சக்திகள், மகத்தான காரணங்கள், பின்னே யிருந்து கொண்டு வேலை செய்துதான் யுத்தத்தைக் கிளப்பிவிடுகின்றன. ஆதிகாலத்தில், உலகத்தை யெல்லாம் ஜயிப்பதற்காக ஓர் அலெக்ஜாந்தர், யுத்தம் நடத்தியிருக்கலாம்; உலகத்தை யெல்லாம் அழிப்பதற்காக ஒரு செங்கிஸ்கான், யுத்தம் புரிந்திருக்கலாம்; தர்ம ஸ்தாபனர்த்தம், பாரத—ராமாயண யுத்தங்கள் நிகழ்ந்திருக்கலாம். தனிப்பட்ட தெளிவான சில காரணங்களுக்காக அல்லது நோக்கங்களோடு, தனிப்பட்ட சில மனிதர்கள் பெரிய யுத்தங்களைத் தொடங்கிவிடுவது, முன் காலத்தில் சாத்தியமா யிருந்திருக்கலாம்; தற்காலத்தில் சாத்தியமே அல்ல. போன யுத்தத்தைத் தொடங்கியவர் கெய்ஸர் என்றோ, இந்த யுத்தத்தைக் கிளப்பியவர் ஹிட்லர் என்றோ சொல்வது அர்த்த மற்ற பேச்சு. போர்க்களத்திலே கண்ணன், அர்ச்சுனனை நோக்கி, ''பார்த்தா! இதோ உன் முன்னே நிற்பவரை யெல்லாம், நீ கொல்வதாக நினைத்து மயங்காதே. இவர்களெல்லோரும் ஏற்கெனவே கொல்லப்பட்டு விட்டார்கள். அவர்களுடைய பாவம், அவர்களைக் கொன்றுவிட்டது. நீ ஒரு நிமித்த மாத்திரம்தான்'' என்பதாகச் சொன்னர். போன யுத்த முடிவில், ஜய அஹங்காரத்தினல், வெற்றி நாடுகள் புரிந்த பழைய பாவந்தான், இந்த யுத்தமாக உருவெடுத் திருக்கிறது. இன்று நடக்கும் இந்தப் பிரம்மாண்டமான, கோர பயங்கரமான, ஊழிக் கூத்தைப்போன்ற யுத்தத்துக்கு விதை ஊன்றியவை, அந்த நாடுகள்தான். அந்த விதையே, வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை. வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை

யுத்தத்தின் காரணம்

தான், ஒரு முஸலீனியைச் சிருஷ்டித்தது ; ஒரு ஹிட்லரைச் சிருஷ்டித்தது ; ஒரு டோஜோவையும் கூடச் சிருஷ்டித்தது என்று சொல்லலாம். அந்த யுத்தத்திலே நேச நாடுகளின் பக்கம் சேர்ந்து கொண்ட இதாலியும் ஜப்பானும், இந்த யுத்தத்திலே எதிரிக ளாகிவிட்டன. காரணம் என்ன? அந்த வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் விளைவுதான்.

வெர்ஸேல்ஸ் உடன்படிக்கை, ஜெர்மனியைச் சின்னு பின்னம் செய்தது; அலங்கோலப்படுத்தியது; அதன் காலனிகளைப் பிடுங்கியது. பிடுங்கிய காலனிகளை நேச நாடுகள் பங்கிட்டுக்கொண்டன. இதாலிக்கும் ஜப்பானுக்கும், சரியான பங்கு கிடைக்கவில்லை என்ற ஏமாற்றம். ஜெர்மனிக்கோ, தான் அலங்கோலமானதில் கோபம். அந்த ஆத்திரமும் ஏமாற்றமும் புகைந்து புகைந்து, இன்று பெருநெருப்பாய் மூண்டிருக்கிறது. இதுதான், உலகையே சூழ்ந்து கவிந்திருக்கும் இந்த மகா யுத்தம். சுருக்கமாகச் சொன்னுல், சாம்ராஜ்யப் பொருமையும் போட்டியுமே, பழைய யுத்தத்தின் காரணம்; அதுவேதான் இந்த யுத்தத்தையும் தூண்டிவிட்டிருக்கிறது.

யுத்தத்திலே வெவ்வேறு நாடுகள், வெவ்வேறு நோக்கங்களாலும் வெவ்வேறு நிர்ப்பந்தங்களாலும் சேர்ந்து கொள்ளுகின்றன. ஒருவர் சொல்லுகிருர்: "யுத்தம் என்பது ஏதோ ஒரு சர்வதேசப் பந்து விளையாட்டு என்று சிலர் நினைத்துக்கொண் டிருக்கிருர்கள். அந்த விளையாட்டிலே, பந்துக்குப் பதிலாக, பீரங்கிக் குண்டுகளை உபயோகிக்கிருேம் என்பது அவர்கள் எண்ணம். இது உண்மையல்ல.

கட்சிகளின் இயல்பு

ஏனெனில், யுத்தத்திலே யாரார் இன்னின்ன கட்சியைச் சேர்ந்தவர் என்று தெளிவாய் நிர்ணயிக்க முடியவில்லை. அதுவும், ஐக்கிய நாடுகள் சம்பந்தப்பட்ட மட்டில், இது

சாத்தியப்படவே யில்லை. ஒரே லட்சியமும் அவர்களுக் கில்லை. நிலைமை மகா குழப்பமா யிருக்கிறது.''

இந்த யுத்தத்திலே, பிரிட்டனின் நோக்கமும், அமெரிக்காவின் நோக்கமும், சீனுவின் நோக்கமும், ருஷியாவின் நோக்கமும் ஒன்றேயென்று சொல்லமுடியுமா? செல்வச் செழிப்பு நிறைந்த அமெரிக்காவுக்கு, உலக மார்க்கெட் வேண்டும்; அதைப் பெற உலகெங்கும் செல்வாக்குத் தேவை. பிரம்மாண்டமான சாம்ராஜ்யத்தைப் படைத்த பிரிட்டனுக்கு, மடிக்கனம் குறையாதிருக்க வேண்டும். திக்கற்று உருக்குலைந்த சீனு, ஐக்கியமுற்று ஜீவன் பெறப் போராடுகிறது. மகத்தான புரட்சியால் புதிய சமுதாயத்தைப் படைத்த ருஷியா, தற்காப்புக்காகப் பாடுபடுகிறது.

யுத்த நாடுகளையாவது, திட்டமாக இரு கட்சிகளாய்ப் பிரித்துச் சொல்ல முடிகிறதா? பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் எதிரி ஜப்பான். ஆனல், ருஷியாவுக்கு அது எதிரியல்ல. 'நம்முடைய கீழ்நாட்டுத் தோழன்' என்று ஜப்பானைப் பாராட்டுகிறது ஜெர்மனி. ஜப்பானையும் அச்சு நாடுகளிலே ஒன்ருகத்தான், பிரிட்டனும் பிரான்ஸும் மதிக்கின்றன. ஆயினும், ஜெர்மனியின் சத்துருவான ருஷியாவோடு ஜப்பானைப் போரிடச் செய்ய, அதனல் ஆக வில்லை. ஆகவே, யுத்த நாடுகளுக்குள்ளே திட்டமான கட்சி வரையறை இல்லை; ஒரே லட்சியமும் இல்லை. அப்படி யிருந்தும் யுத்தம் நடக்கிறது. எதற்காக? ஏன்?

லட்சிய ஒற்றுமையோ, கருத்து ஒற்றுமையோ இல்லா விட்டாலும், யுத்த நாடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரே விதமான ஆசை உண்டு. யுத்தத்தில் எப்படியாவது ஜயித்து, தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பதே அந்த ஆசை. அதற்காக, ஒவ்வொன்றும், தன்னுடைய உண்மையான நோக்கங்களை மறைக்கிறது; அல்லது திரிக்கிறது.

பற்பல சமரசங்களைச் செய்து கொள்கிறது. உன்னத தத்துவங்களை யெல்லாம் தனக்குச் சாட்சி கூறுகிறது. நேர் எதிரான கொள்கைகளையுடைய நாடுகளோடு, கூடிக் குலாவி உறவு கொண்டாடுகிறது. ஆனால், இதெல்லாம் நிலைத்து நிற்குமா? 'ஆபத்துக்குப் பாபமில்லை' என்ற மனோ தர்மத்துக்குச் சாசுவதத் தன்மை இருக்க முடியுமா?

யுத்தத்திலே, எதிரியால் ஆக்ரமிக்கப்பட்ட நாடுகள் இருக்கின்றன. நேச சாம்ராஜ்யங்களுக்குக் கீழடங்கிய அடிமை நாடுகளும் காலனிகளும் இருக்கின்றன. இந்த நாடுகளின் மக்களுக்கெல்லாம், யுத்தத்தின் ஜயாபஜயத்தைப்பற்றி என்ன கவலை? ஜனநாயக நாடுகளுக்குள்ளேயே, ஓர் உரிமையுமற்று வீழ்ந்து கிடக்கும் ஏழை மக்களுக்குத்தான் அதிலே என்ன உற்சாகம்? யுத்தம் முடிந்தால், அவர்களெல்லாம் அடையப்போகும் லாபம் என்ன? அந்தப் பல்வேறு மக்களுக்கும் ஏதாவது விமோசன முண்டா? 'ராமன் ஆண்டால் என்ன; ராவணன் ஆண்டால் என்ன?' என்று அந்த ஜனங்கள் நினையாமல், உலகத்திலே தங்களுக்கும் பாத்தியமுண்டு, வாழ்வுண்டு, பெருமை யுண்டு, சுகமுண்டு என்று எண்ணும்படி செய்ய என்ன வழி?

இன்னுமொரு விஷயம். யுத்தமே தங்களுக்கு வாய்த்த அரிய சந்தர்ப்பம் என்று நினைத்துப் பற்பல விதமாய்க் கொள்ளையடிப்பதையே குறியாகக்கொண்ட சுயநலக் கும்பல்கள், ஒவ்வொரு நாட்டிலுமே கிளம்புகின்றன. அற்பக் குரோதங்களோ, அதிருப்தியோ, தனிப்பட்ட பொறாமையோ கொண்ட ராஜீயவாதிகள், தங்கள் தேசத்தைக் காட்டிக் கொடுத்தாவது செல்வாக்குப் பெறவும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளவும் முயல்கிறார்கள். அடிமை நாடுகளின் தேசிய உத்வேகம், யுத்தமென்ற பெரும் புயலைக் கண்டதும், கொந்தளித் தெழும்பித் திசை தெரியாமல் சீறுகிறது. இப்

படித் தலைகால் புரியாத இன்னும் எத்தனையோ சக்திகளை யெல்லாம் யுத்தம் மேலே கிளப்பிவிட்டுப் பிசாசாட்டம் ஆடச்செய்கிறது. அவைகளை யெல்லாம் சமாளிக்கும் வழி தான் என்ன?

யுத்தம் வெற்றிகரமாய் முடிவடைந்து விடுகிற தென்றே வைத்துக் கொள்வோம். அதன் பிறகு ஏற்படும் சமாதானம், உண்மையான சமாதானமாயிருக்குமா? உல கெங்குமுள்ள பற்பல நாட்டு மக்களும், சௌக்கியமாய், சுதந்தரத்தோடு, அந்நிய உபத்திரவங்க ளின்றி, அமைதியாக வாழ இடங்கிடைக் குமா? தேசங்கள் மட்டிலுமல்ல; தனி மனிதர்களுமே சுரண்டலுக்கு ஆட்படா மலும், சுய முயற்சிக்கு வசதியும் சந்தர்ப்பமும் பலனும் கிடைக்குமாறும், நியாயமான வாழ்க்கை இன்பங்களை அனுபவிப்பதிலே எவ்வித இடையூறுமின்றிச் சுயேச்சை யாகவும், வாழ யோக்கியமாய் உலகம் மாறியிருக்குமா? உலகிலே மீண்டும் யுத்த நாச பயங்கரங்கள் துளிர்க்காதிருக் குமா? மொத்தத்தில், இந்த யுத்தத்தின் லட்சியங்கள் என்ன? அதாவது, ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதாகச் சொல்லுகின்றனவே, அந்த ஐக்கிய நாடுகள் சம்பந்தப் பட்டமட்டில், யுத்த லட்சியங்கள்—வேறுவிதம் சொன்னால், சமாதான லட்சியங்கள் — எவையேனும் உண்டா? யுத்த ஆரம்ப காலத்திலே, இந்த முக்கியமான கேள்வி எழுந்தது.

லட்சியங்கள் யாவை?

யுத்த லட்சியங்களை ஐக்கிய நாடுகள் வகுத்து வெளி யிட வேண்டுமென்று, பற்பல பேரறிஞர்கள் ஓயாமல் வற்புறுத்தி வந்தார்கள். எச். ஜி. வெல்ஸ் என்ற ஆங்கிலப் பேராசிரியர், இது பற்றி ஒரு பெரிய விவாதமே நடத்தி னார். வெல்ஸ் சிறந்த தீர்க்கதரிசி என்று கீர்த்தி பெற்ற வர். ஏற்கெனவே, அவருடைய தீர்க்கதரிசனங்களில் சில நிறைவேறியு மிருக்கின்றன. அப்பேர்ப்பட்டவர் இந்த

யுத்த ஆரம்ப காலத்தில் கூறினர்: "உலக சரித்திரத்தில் ஒரு திட்டமான சகாப்தத்தின் முடிவிலே நாம் வாழ்கிறோம். சர்வாதிகாரம் படைத்த ராஜாங்கங்களைக் கொண்டது அந்தச் சகாப்தம். அந்தச் சர்வாதிகார ராஜாங்கங்களின் காலம் மலையேறிவிட்டது. இனி நாம் புதிய வழியில் வாழவேண்டும்; இல்லாவிட்டால், மனித சமூகமே நாசமாகிவிடும்." தனிப்பட்ட ராஜாங்கங்களுக்குச் சர்வாதிகாரம் இருப்பது தொலையவேண்டும்; உலக முழுவதற்கும் பொதுவான கூட்டு ஸ்தாபனம் ஒன்று அமைக்கவேண்டும்; மானிட உரிமைகளை வகுத்துப் புதிய சாசனம் ஒன்றைப் பிரகடனம் செய்யவேண்டும்—இவைதான், உலக சமாதானத்தை நிலைநாட்ட, அவர் கூறிய யோசனைகள்.

"யுத்தம் முடியும் வரையில், வெற்றிபெறும் வழி ஒன்றைப் பற்றியே நாம் கவலைப்பட வேண்டும். யுத்த லட்சியங்களையோ, அல்லது சமாதான லட்சியங்களையோ பற்றிய யோசனைகளையெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்று அப்போது பல ராஜ தந்திரிகள் உறுமினர்கள். "யுத்தம் முடிந்தால், உண்மையான உலக மகா நாடும்—அதாவது உண்மையான உலக சமாதான விவாதங்களும்—அதோடு நின்றுவிடும். ராஜ தந்திரிகளும் அரசியல் வாதிகளும், தாங்களே மகா புத்திமான்கள் என்றெண்ணி, கதவை மூடித் தாழிட்ட அறைக்குள்ளே புகுந்து, வெளியுலக மறியாத ரகஸ்யமாய், உலகத்தோரெல்லோரும் வாயைப் பிளந்து அதிசயித்து நிற்கும்படி, உள்ளுக்குள்ளே மற்றொரு வெர்சேல்ஸ் உடன்படிக்கையைத்தான் தயாரித்து விடுவார்கள்" என்று எச்சரித்தார் வெல்ஸ். இப்படிப் பல பேரறிஞர்கள், யுத்த லட்சியங்களைச் சொல்லியாக வேண்டுமென்று 'கரடி'யாய்க் கத்திய தன் பலன்தான், 'அட்லாண்டிக் சாசனம்' என்று சொல்ல வேண்டும்.

1941-ஆம் ஞு ஆகஸ்டுமீ முதற்பாதியிலே, சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் அட்லாண்டிக் சமுத்திரத்திலே, இரண்டு கப்பல்களில் சந்தித்தார்கள். எட்டு ஷரத்துக்கள் அடங்கிய ஒரு சாசனத்தில் கையெழுத்திட்டார்கள். ஆகஸ்டு மாதம் 14௳, அந்தச் சாசனத்தை, பிரிட்டனின் உதவிப் பிரதம மந்திரி ஆட்லி, ரேடியோ மூலம் உலகத்துக்குப் பிரகடனம் செய்தார். அதுவே 'அட்லாண்டிக் சாசனம்.' அப்போது ஜெர்மனி, தன் மேற்கரங்கப் போரை முடித்துக்கொண்டு, கிழக்கே ருஷ்யா மீது பாய்ந்திருந்தது. ஏறக்குறைய ஐரோப்பாவில் முக்கால் வாசிப் பாகத்துக்கு மேல், கிரீஸ் நாடு உள்பட, அச்சு நாடுகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு விட்டது. மத்தியதரைக் கடலில், பிரிட்டன் நுழைய முடியாததால், எங்கெங்கோ சுற்றி வளைத்துக் கொண்டு, அதன் கப்பல் போக்குவரத்துக்கள் நடக்க வேண்டியதாயிற்று. ருஷ்யாவைத் தன் எதிரியின் எதிரி என்று பிரிட்டன் பாவித்ததே யொழிய, தன்னுடைய யுத்தக் கூட்டாளியாக மதித்து அதனுடன் நெருங்கிய நேசம் கொள்ளவில்லை. பிரிட்டனுக்குப் பூர்ண அநுதாபங் காட்டிச் சகல உதவிகளையும் அமெரிக்கா செய்து வந்தது. என்றாலும், யுத்தத்திலே நேரடியாய்ச் சேர்ந்து கொள்ளவில்லை. இந்நிலையிலே தான், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலும், அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டும், 'அட்லாண்டிக் சாசன'த்தைத் தயாரித்துக் கையொப்பமிட்டார்கள். அந்தச் சாசனத்தின் ஷரத்துக்களை நாம் ஆராயும்போது, அதற்குப் பகைப்புலனான இந்த நிலைமைகளையெல்லாம் நன்றாய் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

சாசன வரலாறு:

அட்லாண்டிக் சாசனத்தின் வாசகம் வருமாறு:

"ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியும், பிரிட்டிஷ் மன்னர்பிரான் சர்க்காருடைய பிரதிநிதியாகிய பிரதம

மந்திரி சர்ச்சிலும் சந்தித்து, முறையே தத்தம் நாடுகளின் தேசியக் கொள்கைகளில் அனுஷ்டிக்க வேண்டிய பொதுத் தத்துவங்களை வெளிப்பட அறிக்கை செய்வது நலம் என்று எண்ணுகிருர்கள். உலகத்தின் வருங்காலத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு, அந்தத் தத்துவங்களையே அஸ்திவாரமாக அவர்கள் நம்பியிருக்கிருர்கள்.

"1. பிரதேசங்களையோ, வேறு எதனையுமோ அதிகரித்துக் கொள்ள, அவர்களுடைய நாடுகள் முயற்சிக்கவில்லை.

"2. சம்பந்தப்பட்ட நாட்டு ஜனங்கள் சுயேச்சையாய் வெளியிடும் விருப்பங்களுக்கு இசைந்தபடிக் கல்லாமல், பிரதேச மாறுதல்கள் எவ்வையும் நடக்காதபடி பார்த்துக்கொள்ள, அவர்கள் விரும்புகிருர்கள்.

"3. தாங்கள் இன்ன வகையான அமைப்புடைய சர்க்காரின் கீழேதான் வாழ்வோம் என்று முடிவு செய்துகொள்ள, சகல நாட்டு ஜனங்களுக்கும் உரிமை உண்டு என்று அவர்கள் மதிக்கிருர்கள்; சர்வாதிகார உரிமைகளும் சுய ஆட்சியும் எந்தெந்த நாட்டு மக்களிடமிருந்து பலவந்தமாய்ப் பிடுங்கப்பட்டனவோ, அந்தந்த நாட்டு மக்களுக்கெல்லாம், அந்த உரிமைகளையும் சுய ஆட்சியையும் மீட்டுக்கொடுக்க அவர்கள் விரும்புகிருர்கள்.

"4. பெரியதோ சிறியதோ, தோற்றதோ வென்றதோ எத்தகையதா யிருந்தாலும் சரி; சகல ராஜ்யங்களுக்குமே, அவற்றின் பொருளாதாரச் செழிப்புக்குத் தேவையான அளவு, உலகத்தின் மூலப் பொருள்களும் வியாபாரமும், சம நிபந்தனைகளிலே கிடைத்து அனுபவிக்கும்படி செய்ய, இருவரும் முயற்சிப்பார்கள். ஆனல், அவர்களுடைய

தற்போதைய கடமைகளுக்கு உட்பட்டே, இந்த முயற்சியை அவர்கள் செய்வார்கள்.

"5. சகல தேசங்களுக்குமே, தொழிலாளரின் நிலைமைகளில் அபிவிருத்தியும், பொருளாதார முன்னேற்றமும், சமூக வாழ்க்கையில் பத்திரமும் சம்பாதித்துக் கொடுக்கும் நோக்கத்தோடு, சகல தேசங்களும் ஒன்றேடொன்று பரிபூர்ணமாய் ஒத்துழைக்கும்படி ஏற்பாடு செய்ய, அவர்கள் விரும்புகிறார்கள்.

"6. நாஜிகளின் அக்கிரமத்தை முடிவாக அழித்த பின்பு, சகல தேசங்களும் தத்தம் எல்லைகளுக்குள் பத்திரமாய் வாழ்வதற்குரிய வசதிகளைத் தரும் சமாதானத்தை நிலைநாட்டலாம் என்று அவர்கள் நம்புகிறார்கள். அத்தகைய சமாதானத்தினால், சகல நாடுகளிலுமுள்ள சகல மக்களும், பயமோ, வறுமையோ இல்லாமல் வாழும் வசதி உறுதிப்படும்.

"7. கடல்களிலும் சமுத்திரங்களிலும் எவ்விதத் தடங்கலுமின்றி, சகல மனிதர்களுமே பிரயாணம் செய்யும் உரிமை, அந்தச் சமாதானத்தினால் கிடைக்கும்.

"8. பிரத்யட்ச காரணங்களையும் ஆத்மீக காரணங்களையும் உத்தேசித்து, உலகின் சகல தேசங்களுமே, பலாத்காரத்தைக் கைவிட்டாக வேண்டும் என்று, அவர்கள் நம்புகிறார்கள். தங்கள் நாடுகளுக்கு வெளியே ஆக்ரமிப்புச் செய்யப் போவதாக எந்தத் தேசங்கள் பயமுறுத்துகின்றனவோ, எவை பயமுறுத்தக் கூடுமோ, அந்தத் தேசங்களெல்லாம், தரை, கடல் அல்லது ஆகாயப் படையை வைத்திருக்குமானால், வருங்கால உலகில் சமாதானத்தைக் காப்பாற்றவே முடியாது; ஆகையால், உலகெங்கும் விஸ்தாரமாய்ச் சாசுவதமாய்ப் பாதுகாப்பளிக்கக்

கூடிய பொது ஏற்பாடொன்றை முடிவு செய்யு முன்பாக, மேற்குறித்த தேசங்களை ஆயுதப் பரிகரணம் செய்வது அத்தியாவசியம் என்று அவர்கள் நம்புகிருர்கள். அதேபோல, சமாதானப் பிரியர்களான சகல நாட்டு ஜனங்களையும் நசுக்கிப் பிழிந்து கொண்டிருக்கும் ஆயுத பாரத்தை லேசுப் படுத்துவதற்கு வேண்டிய சாத்தியமான சகல இதர நடவடிக்கைகளையும் கைக்கொள்ளுவதற்கு உதவியும் ஊக்கமும், அவர்கள் அளிப்பார்கள்.

—பிராங்கிளின் ரூஸ்வெல்ட்

—வின்ஸ்டன் எஸ். சர்ச்சில் "

இந்தச் சாசனம் பிரகடனமான உடனே, "நாம் வெகு நாளாய் ஆசைப்பட்டுக் கொண்டிருந்த யுத்த லட்சியங்கள் பிரகடன மாகிவிட்டன. நாம் எதற்காகப் போராடுகிருேம், எதிரி எதை எதிர்க்கிருன் என்று தெளிவாகி விட்டது" என, லண்டன் 'டைம்ஸ்' போன்ற பல பத்திரிகைகள் எக்களித்தன. ஆனல், "இந்தக் காரியத்தைச் செய்வதற்குத்தான இரண்டு பெரிய ராஜதந்திரிகள் உயிருக்கும் துணிந்து சந்தித்தார்கள்?" என்று 'டெய்லி ஸ்கெட்ச்' என்ற ஒரே ஒரு பத்திரிகை மட்டில், சீமையில் ஆட்சேபித்தெழுதியதாம். இந்தச் சாசனத்தைப்பற்றிப் பின்னல் அடிக்கடி வானளாவப் புகழ்ந்து பிரஸ்தாபிப்போரும் உண்டு. இந்தச் சாசனம், உண்மையிலே மானிடவர்க்கத்துக்குக் கிடைத்த பெரும் வரமா? இதனல், உலக சமாதானம் ஏற்பட்டு, சர்வஜனங்களும் அமைதியாய், க்ஷேமமாய், சுதந்தரமாய் வாழ, வழி பிறந்து விடுமா?

இந்தச் சாசனம் பிறந்து, இரண்டு வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. இந்த இடைக் காலத்தில் பற்பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. இந்தச் சாசன வாசகத்தின்

தன்மையையும், பின்னல் நிகழ்ந்திருக்கும் சில நிகழ்ச்சிகளையும் ஒருங்கே ஆராய்ந்து பார்த்தால், உலகெங்கும் நிர்க்கதியாய் ஏங்கிக் கிடக்கும் மக்களுக்கு, இந்தச் சாசனத்தினல், ஏதேனும் ஆறுதலும் நம்பிக்கையும் கிடைக்குமா என்பதை அறிந்து விடலாம்; உலகெங்குமுள்ள சர்வ ஜனங்களுக்கும், மானிட குலத்துக்கே, பொதுவான சமாதான லட்சியங்களை இது வகுத்துவிட்டதா என்பதையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

யாருக்குப் பிரயோகம்?

இந்தச் சாசனத்தை ரேடியோ மூலம் உலகத்துக்குப் பிரகடனம் செய்த பிரிட்டிஷ் உதவிப் பிரதம மந்திரி ஆட்லிக்கு, சாசனம் பிறந்த சில நாளில் ஒரு விருந்து நடந்தது. அப்போது அவர் சொன்னர் :

> "நாம் எந்தச் சுதந்தரத்துக்காகவும் பத்திரத்துக்காகவும் போராடுகிறோமோ அந்த இரண்டும், மனித குலத்தின் எந்த நிறத்தவர்க்கேனும் மறுதளிக்கப் பட மாட்டா. இந்த நாட்டுச் சர்க்காரின் சார்பாக யுத்தத்தைப் பற்றிப் பிரகடனம் செய்யப் பட்டுள்ள (அட்லாண்டிக்) சாசனத்தில், அப்படி மறுதளிக்கப்படும் என்று அர்த்தம் தொனிக்கக் கூடிய குறிப்பு எதையும் நீங்கள் காணமுடியாது...
>
> "பிரகடனம் செய்யப்பட்ட இந்தக் கொள்கைகள், வெள்ளையோ பிற நிறமோ எதைச் சேர்ந்தவராயினும், உலகின் சகல மக்களுக்குமே பிரயோகமாகும் என்று அழுத்தமாய்க் கூறுகிறேன்."

ஆனல், பிரிட்டிஷ் பிரதம மந்திரியும் சாசனத்தில் கையெழுத்திட்ட ஒருவருமான சர்ச்சில், அவசர அவசரமாய் அதை உடனே திருத்திவிட்டார். காமன்ஸ் சபையில் அவர் செய்த அறிக்கையில், இந்தச் சாசனத்தைப் பற்றிக் குறிப்பிட்டதாவது :

"இப்போது ஐரோப்பாவில் நாஜி ஆதிக்கத்தின் கீழ் அகப்பட்டு அவதியுற்றுக் கொண்டிருக்கும் ராஜ்யங்களின் சர்வாதிகார உரிமையும், சுய ஆட்சியும், தேசீய வாழ்வும் அவைகளுக்கு வழங்கப்பட வேண்டும்; எல்லை மாறுதல் செய்விக்க வேண்டிய நாடுகளில், எந்தக் கொள்கைகளைக் கையாண்டு எல்லை மாறுதல்கள் செய்ய வேண்டும் என நிர்ணயிக்கப்படவேண்டும். இந்த இரண்டு விஷயங்களும்தான், நாங்கள் அட்லாண்டிக்கில் சந்தித்த போது, எங்கள் மனதில் இருந்தன. பிரிட்டிஷ் மன்னரது ஆட்சிக்குட்பட்ட நாடுகளின் ஜனங்கள் படிப்படியாய்ச் சுய ஆட்சி பெறுவதென்ற விஷயத்துக்கும், மேற்குறித்த பிரச்னைக்கும் சம்பந்தமில்லை. (அது வேறு விஷயமாகும்)......

"இந்தியாவிலும் பர்மாவிலும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் வேறு பாகங்களிலும் அரசியல் அமைப்பு வளர்ச்சி சம்பந்தமாக அவ்வப்போது செய்யப்பட்டு வந்த பல்வேறு அறிக்கைகளை, இந்தக் கூட்டுப் பிரகடனம் (அட்லாண்டிக் சாசனம்) எவ்விதத்தும் பாதிக்கவில்லை."

அதாவது, பச்சையாய்ச் சொன்னால், "சத்துருவால் விழுங்கப்பட்ட புதிய 'அடிமை' நாடுகளுக்கே அட்லாண்டிக் சாசனம் பிரயோகமாகும்; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்குட்பட்ட பழைய 'அடிமை'களுக்கு அது பிரயோகமாகாது" என்பதுதான் சர்ச்சிலின் கருத்து. பழைய 'அடிமை'களுக்கு, பிரிட்டிஷ் எஜமான், கருணை கூர்ந்து அவ்வப்போது துளித் துளியாகச் சுதந்தர தானத்தை வழங்கும்; அதை அவைகள், துஷ்டத்தனம் செய்யாமல், நல்ல பிள்ளைகளாக நடந்து கொண்டு, நன்றியோடு வாங்கிக் கொள்ளவேண்டும்!

ஆனால், இந்தியா மந்திரியான அமெரி துரையோ, இன்னும் ஒரு படி மேலே போய்விட்டார். அவர் அப்போதே சொன்னார்:

"எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரமாய்ச் சாத்திய மாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள்ளே, இந்தியா சுதந்தரமுள்ள ஒரு சமத்துவப் பங்காளி யாகிவிட வேண்டுமென்பது தான், பிரிட்டனின் உண்மையான ஆவல்......

"இது, கொள்கை பற்றிய ஒரு விஷயம். அவ்விஷ யத்தில், அட்லாண்டிக் சாசனம் பிறக்கு முன்னேயே நாங்கள் முந்திக் கொண்டு, வழி காட்டி விட்டோம். இந்தச் சாசனம் ஒன்றும் புதிய கொள்கை எதனையும் சொல்லி விடவில்லை"

இதே கதையைத் தான், சில நாளைக்கு முன் மீண்டும் அமெரி அளந்திருக்கிறார்; அட்லாண்டிக் சாசனம் தயா ராக வெகு நாளைக்கு முன்னேயே, அதற்குள் அடங்கி யிருக்கும் தத்துவங்களை, இந்தியா விஷயத்தில் தாங்கள் பிரயோகித்து வருவதாக, திரும்பவும் அவர் கூறியிருக் கிறார். அமெரியின் இந்த ஜால வேடிக்கையை, அட் லாண்டிக் சாசனத்துக்கு அருமையான வியாக்கியானம் என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

அட்லாண்டிக் சாசனம் நாஜிகளால் ஆக்ரமிக்கப் பட்ட ஐரோப்பிய நாடுகளுக்குத்தான் பிரயோகமாகும் என்று, தளுக்காக, சர்ச்சில் சொன்னார். இந்தியாவில் நடக்கிறதே, இதுதான் அட்லாண்டிக் சாசனம் என்கிறார் அமெரி! அப்படியானால், நாஜிகளால் ஆக்ரமிக்கப்பட்டுத் தவிக்கும் திக்கற்ற நாடுகளுக்கு, பிரிட்டனும் அமெரிக்கா வும் தேடித் தரப்போகிற விடுதலை, இந்தியாவின் கதியாகத் தான் இருக்கப்போகிறது என்று அர்த்தம்?

அட்லாண்டிக் சாசனம் கையெழுத்தான சில நாளைக் கெல்லாம், அதாவது 1941-ஆம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 24-ஆம் தேதி, சர்ச்சில் செய்த ஒரு ரேடியோப் பிரசங்

கத்தைப் படித்தால், அந்தச் சாசனத்தின் அடிப்படையான நோக்கம் நன்ருய்ப் புலனுகும். முடிவான சமாதான லட்சியங்களையோ, யுத்த லட்சியங்களையோ, தாமும் அமெரிக்க ஜனதிபதியும் இந்தச் சாசனத்திலே வகுக்கவில்லை என்று அவர் கூறுகிருர். ஆனல், சகல மக்களுக்கும், முக்கியமாய் ஜயிக்கப்பட்டு அமுக்கப்பட்ட மக்களுக்கெல்லாம், தங்கள் நோக்கத்தைத் தெரிவிக்கும் யுத்த கால அறிக்கை ஒன்றையே தயாரித்ததாக, சர்ச்சில் அதிலே சொல்லுகிருர். 'வீர நார்வே மக்களே, ஜெக் நாட்டினரே, போலந்தியரே, பிரஞ்சுக்காரரே, ஹாலந்து–பெல்ஜியம்–லக்ஸெம்பர்க் வாசிகளே, யுகோஸ்லாவியரே, கிரேக்கரே' என்றெல்லாம் விளித்து, "அஞ்சாதீர்கள்; உதவி வருகிறது. நம்பிக்கையா யிருங்கள். விமோசனம் நிச்சயம்" என்று, அந்த மக்களுக்கெல்லாம், அவர் அபயம் கொடுக்கிருர். எதற்காக? அந்த நாடுகளின் ஜனங்களெல்லாம், தங்கள் எதிர்ப்புச் சக்தியனைத்தையும் அடியோடு துறந்து நாஜி ஆதிக்கத்துக்குப் பணிந்துவிடா திருக்கவேண்டும் என்பது நோக்கம். இது மாத்திரமல்ல; தோற்ருல், போன யுத்தம் மாதிரியே, தங்கள் 'பல்லைப் பிடுங்கி' உலக வியாபாரத்தில் தங்களுக்கு இடமே யில்லாதபடி செய்து வாட்டுவார்களோ என்று, எதிரி நாடான ஜெர்மனியின் மக்கள், ஐக்கிய நாட்டினரிடம் அஞ்சக்கூடு மல்லவா? அந்த அச்சம் வேண்டியதில்லை யென்று, அவர்களுக்கும் கூட, ஒருவித அபயம் அளிக்கிருர். 1917-ஆம் வருஷம் இருந்த மனேபாவத்தைப்போல, ஜெர்மன் வியாபாரங்களை யெல்லாம், பற்பல அதிகப்படித் தீர்வைகள், தடைகளின் மூலம் நாசம் செய்வது தங்கள் நோக்கமில்லை யென்று சர்ச்சில் தெரிவித்தார். "எந்தப் பெரிய நாடும், கைத்தொழில், வியாபாரங்களின் மூலம், தானும் தன் மக்களும் கௌரவமாய் ஜீவனம் செய்ய முடியாதபடி தடுத்து, அது செல்வச்

செழிப்படையாதபடி செய்தால், அது உலகத்துக்கும் நன்மையல்ல; நம் இரு நாடுகளுக்கும் நன்மையல்ல — இந்தத் திட்டமான கொள்கையையும் நாங்கள் கைக்கொண்டு விட்டோம்'' என்று, மேலும் அவர் விளக்கியுள்ளார். இதையெல்லாம் கவனிக்கும்போது, என்ன தெரிகிறது? புதிதாய் அடிமைப்பட்ட நாடுகளுக்குத் தஞ்சமளித்துத் தைரிய மூட்டுவதும், எதிரி நாட்டு மக்களுக்கு, தோற்ருல் என்னுகுமோ என்று மனதை உறுத்தக் கூடிய பயத்தைத் தீர்க்கவுமே, அட்லாண்டிக் சாசனத்தைத் தயாரித்தோர் நோக்கங் கொண்டிருக்கிருர்கள் என்பது தெள்ளத் தெளிய விளங்குகிறது அல்லவா? இப்படியிருக்க, ''ஆஹா! யுத்த லட்சியங்களும் சமாதான லட்சியங்களும் வகுக்கப் பட்டுவிட்டன. யுத்தத்திலே ஐக்கிய நாடுகள் ஜயிக்க வேண்டியதுதான் பாக்கி; உடனே பரலோக ராஜ்யம் பூலோகத்திலே ஸ்தாபிதமாகி விடும்'' என்றெல்லாம் குதிப்பதிலே ஏதாவது அர்த்தமுண்டா?

கெய்ரோவும் டெஹ்ரானும்

அட்லாண்டிக் சாசனம் பிறந்த இரண்டு வருஷங்களுக்குப் பிறகு, 1943-ஆம் ஹு டிசம்பர்மீ 1உ, கெய்ரோவில், சர்ச்சில், ரூஸ்வெல்ட், சீனத் தலைவன் சியாங் கெய் ஷெக் ஆகிய மூவரும், முதன் முதலாக நேருக்கு நேரே சந்தித்துக் கூடினுர்கள். மந்திராலோசனை செய்தார்கள். கீழ் நாட்டு யுத்த நோக்கங்களைப் பற்றிப் பொதுவான அறிக்கை யொன்றையும் வெளியிட்டார்கள். அதன் சாரமாவது:

> ''ஜப்பானின் ஆக்ரமிப்பைத் தடுத்துத் தண்டிப்பதற்காகவே, மூன்று நேச வல்லரசுகளும் போரிடுகின்றன. தங்களுக்கு எவ்வித லாபத்தையோ பிரதேச விஸ்தரிப்பையோ பெற, அவை ஆசைப் படவில்லை. ஜப்பான் கைப்பற்றிய சகல பசிபிக் தீவுகளையும் அதனிடமிருந்து

பிடுங்கி விடுவதும், சீனுவிடமிருந்து அது அபகரித்த மஞ்சூரியா, பார்மோஸா, பெஸ்கடோர்ஸ் முதலிய பிரதேசங்களைச் சீனக் குடியரசுக்கே மீட்டுத் தருவதும், நேச வல்லரசுகளின் நோக்கமாகும். பேராசையோடு பலவந்தமாய் ஜப்பான் கைப்பற்றிய சகல இதர பிரதேசங்களிலிருந்தும், அதை விரட்டி விடுவோம். அடிமைப்பட்ட கொரியாவுக்குச் சுதந்தரம் சம்பாதித்துத் தருவோம். நிபந்தனை யில்லாமல் ஜப்பான் சரணுகதியடையும் வரையில், அதனுடன் தொடர்ந்து போரிடுவோம்.''

ஐரோப்பாவுக்காகத் தயாரான அட்லாண்டிக் சாசனத்துக்கும், கெய்ரோவில் தயாரான இந்தப் 'பசிபிக் சாசன'த்துக்கும் உள்ள வேற்றுமைகளைக் கவனமாய்ப் பார்க்கவேண்டும். எதிரியின் வசப்பட்ட நாடுகளுக்கெல்லாம் அங்கே அட்லாண்டிக் சாசனத்தில் சுதந்தரமும் சுய நிர்ணய உரிமையும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் 'கெய்ரோ சாசன'த்திலோ, பிடித்த நாடுகளிலிருந்தெல்லாம் ஜப்பானை விரட்டுவது ஒன்றுதான் உறுதி கூறப்படுகிறது. ஜப்பான் ஓடிப் போனபின், பஸிபிக் தீவுகளின் கதி என்ன? அவைகளுக்குச் சுதந்தரமுண்டா? அல்லது அவை யார் கீழேயாவது இருக்குமா? நியாயப்படி சீனுவுக்குச் சொந்தமாயிருக்க வேண்டிய ஹாங்-காங் பிரதேசத்தை, பிரிட்டன் வசப்படுத்திக் கொண்டிருந்ததே; அது இப்போது ஜப்பானின் கையிலே அகப்பட்டு உழல்கிறது. அதை மீட்டதும், சீனுவிடமே அது கொடுபட்டு விடுமா? மலேயாவும், பர்மாவும் சுதந்தர மடையுமா; அல்லது மீண்டும் பிரிட்டனுக்குக் கீழாகுமா? இந்த விஷயத்திலெல்லாம், வெகு ஜாக்கிரதையாய் மௌனம் சாதிக்கிறது கெய்ரோ அறிக்கை. அட்லாண்டிக் சாசனம், ஐரோப்பிய நாடுகளுக்காக; கெய்ரோ் அறிக்கையோ கீழ் நாடுகளுக்காகத் தானே!

கெய்ரோ அறிக்கை வெளியான அடியிலேயே. டிசம்பர் மீ 6வ இரான் தலை நகரான டெஹ்ரானில், ஸ்டாலின்,

சர்ச்சில், ரூஸ்வெல்ட் ஆகிய மூவரும் மற்ருெரு மந்திரா லோசனை செய்தார்கள். ஓர் அறிக்கையும் வெளியிட்டார் கள். சாரம் இதுதான் :

"யுத்தத்திலும் அதற்குப் பின்னே ஏற்படக்கூடிய சமாதானத்திலும், எங்கள் தேசங்கள் ஒன்றுகூடி உழைக்கும் என்பது உறுதி......

"எங்கள் ஒற்றுமை நிரந்தர சமாதானத்தை ஸ்தா பிக்கும். உலக நாடுகளின் மிகப் பெருமிதமான மகா ஜனங்களது நன்னம்பிக்கைக்குப் பாத்திரமான சமாதா னம் வேண்டும். அது, அநேகம் தலைமுறை வரையில் யுத்த பயங்கரக் கொடுமை வராமல் விரட்டித் தொலைக் கக் கூடியதா யிருக்கவேண்டும். இத்தகைய ஒரு சமா தானத்தை ஸ்தாபிப்பதில் எங்களுக்கும் ஐக்கிய நாடு களுக்கும் உள்ள உன்னதமான பொறுப்பை, நாங்கள் பூர்ணமாக உணர்ந்திருக்கிறோம்.

"எங்கள் நாடுகளின் ஜனங்களைப் போலவே வேறு எந்தெந்த நாடுகளின் ஜனங்கள், கொடுங்கோல் கொடுமை யையும் அடிமைத் தனத்தையும் அடக்கு முறையையும் சகியாமையையும் ஒழிக்க வேண்டுமென்று உள்ளமும் மனமும் ஈடுபட்டிருக்கிறார்களோ, அந்தப் பெரியதும் சிறியதுமான சகல நாடுகளின் ஒத்துழைப்பையும் நாங் கள் நாடுவோம். உலக ஜனநாயக நாடுகளின் குடும்பத் திலே அவைகள் வந்து சேர விரும்பினால், அதை நாங்கள் வரவேற்போம்."

இந்தத் தடபுடலான வார்த்தைப் பந்தலைக் கண்டு யாரும் மிரள வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொன்னால், போன யுத்தத்துக்குப்பின் சக்தியற்று மடிந்து உத்தரக் கிரியைகூட நடக்காமல் அமுங்கியதே ஒரு சர்வதேசச் சங்கம், அந்த மாதிரியே மற்ருெரு சர்வ தேசச் சங்கம் தோன்றக்கூடும் என்று வேண்டுமானால், இதற்கு அர்த்தம் செய்து கொள்ளலாம். அதற்கு மேலே ஒன்றும் சொல்

வதற்கில்லை. ஆனல், என்ன பலன் கிட்டும், அந்தப் புதிய சங்கத்தால்?

அட்லாண்டிக் சாசனத்தின் மிக அடிப்படையான தத்துவம், சகல நாட்டு மக்களும் தத்தமக்கு இஷ்டமான அரசாங்க அமைப்பைப் பெற்று வாழச் சுயநிர்ணய உரிமை அளிப்பதேயாகும். அந்தச் சுயநிர்ணய உரிமையைக் காரியாம்சத்தில் எப்படி நிலைநாட்டிப் பாதுகாப்பது என்பதற்கான கொள்கைகளையே, சாசனத்தின் பற்பல ஷரத்துக்களும் விவரிக்கின்றன என்று மதிக்கலாம். ஆனல், இந்தச் சுயநிர்ணய உரிமைக்கும் சாம்ராஜ்ய வெற்றிக்கும் ஏதாவது பொருத்தமுண்டா? பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில் ஒரு வருஷத்துக்கு முன்னே என்ன சொன்னர்? "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்ற கம்பெனியைக் கலைப்பதற்காக, நான் அதற்குத் தலைமை வகிக்கவில்லை" என்று ஆணவத்தோடு சொன்னர். அதையே சமீபத்தில் திரும்பவும் சொன்னர். "நமக்குச் சொந்தமானவற்றை எல்லாம் நம் கையிலேயே வைத்திருப்பதுதான் நம் எண்ணம்" என்றும் அவர் கூறியுள்ளார். அதாவது பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் என்றென்றைக்கும் கலையாமல் அப்படியே பிரிட்டன் வசமே யிருக்கும்படி காப்பாற்றி வருவதே அவருடைய நோக்கம் என்று இதனல் ஏற்படவில்லையா? இதற்கும் அட்லாண்டிக் சாசனத்துக்கும் 'ஸ்நாநப் பிராப்தி'யாவது இருக்க முடியுமா?

அந்தச் சாசனம் இருக்கிறதே, அது யாரைக் கட்டுப்படுத்துகிறது என்று கவனித்தால், அதுவும் ஒரு விசித்திரமா யிருக்கும். அமெரிக்க ஜனதிபதி கையெழுத்திட்ட அதை, அமெரிக்க செனேட் சபை முறைப்படி அங்கீகரித்து ஒரு தீர்மானம் செய்யக்காணேம்; பிரிட்டிஷ் பிரதம மந்திரி அதில் கையெழுத்திட்டதை அங்கீகரித்து, பிரிட்டிஷ் பார்லிமெண்டும் அவ்வாறு ஒரு தீர்மானம்

செய்ததாய்த் தெரியவில்லை. இப்படி யிருக்க, அந்த இரண்டு பெரும் நாடுகளையும் சட்டப்படி அந்தச் சாசனம் கட்டுப்படுத்துமா? தன்தன் இணையற்ற தலைவர்கள் கையெழுத்திட்ட அந்தச் சாசனத்தை, அவ்விரு நாடு களும் சட்டப்படி நிராகரியாதவரையில், தார்மிக ரீதியில் அவை அதற்குக் கட்டுப்பட்டே யிருக்கும் என்றுதான் நாம் திருப்தி செய்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இனி, சாசன ஷரத்துக்களின் தன்மையைச் சிறிது ஆராய்ந்து பார்ப்போம். நாடு பிடிக்கும் ஆசை தங்கள் நாடுகளுக்கு இல்லை என்று, சாசனத்தின் முதல் ஷரத்தில் சர்ச்சிலும் ரூஸ்வெல்டும் கூறுகிறார்கள். பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இன்னுமா நாடு பிடிக்கும் ஆசை வேண்டும்? வயிறு நிறையத் தின்றவன், உபவாச விரதத்தைக் கடைப்பிடிப்பதாய்ச் சொன்னால் எப்படியோ அப்படித்தானே இது? பிரிட்டனுக்கு உலகெங்கும் மிதமிஞ்சி நாடுகள் இருக்கின்றன. அமெரிக்காவோ, உலகத்திலேயே மிகச் செழிப்பான பிரதேசத்தைப் பெற்றிருக்கிறது. அதன் செல்வ வளமும், செல்வாக்கும் அமோகமாகும். வளமற்று வாடும் இதர நாடுகளின் பொது நன்மைக்காக, தங்கள் வசமுள்ள பிரதேசங்களில் ஏதாவது ஒரு பகுதியை விட்டுக்கொடுக்க, அந்த இரண்டு நாடுகளில் எதுவாவது சம்மதிக்குமா? சம்மதித்தால் அல்லவா, அவைகளின் அந்தரங்கசுத்தியும் தாராளச் சிந்தையும் நிரூபணமாகும்?

ஷரத்துக்களின் கருத்து

இரண்டாவது மூன்றாவது ஷரத்துக்கள், ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் மக்களுக்கும், எல்லை நிர்ணயத்திலும் அரசாங்க அமைப்பிலும் சுதந்தரம் அளிப்பவை யாகும். ஆனால், இந்தச் சுதந்தரத்தைக் காரியாம்சத்தில் எப்படிக்

காட்டுவது? எந்த லட்சணங்களைக் கொண்டு, 'நாடு' 'ஜனங்கள்' என்பவைகளை முதலிலே நிர்ணயிப்பது? பூகோள இயற்கை அமைப்பு, சரித்திரம், நாகரிகம் இவை களை யெல்லாம் ஆராய்ந்து, இன்னின்ன அம்சங்களைக் கொண்டதுதான் ஒரு நாடு என்று ஏதாவது ஓர் 'அளவு கோல்' வகுக்கவேண்டாமா? இந்தியாவையே உதாரண மாய் எடுத்துக்கொள்வோம். இங்கே புதிதாய்க் கிளம்பி யிருக்கின்றனவே பாகிஸ்தான், திராவிடஸ்தான் என்ற கூச்சல்கள்; இவையெல்லாம் சுயநிர்ணய உரிமைகள்தானா? இப்படியே இன்னும் நீட்டிக்கொண்டு சென்றால், தஞ்சா வூர்ஸ்தான், திருநெல்வேலிஸ்தான் என்றுகூடச் சுய நிர்ணய உரிமையை வளர்த்துவிடலாம். நாடுகளைச் சின்னா பின்னமாக்கி, அலங்கோலப் படுத்துவதற்கெல்லாம் சுய நிர்ணய உரிமை என்ற பசப்பு, பிரயோகப்படாது என்ப தற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

உலக வர்த்தகத்திலும் மூலப் பொருள்களிலும் சகல நாடுகளுக்கும் சம வசதிகளைத் தேடிக்கொடுப்பதாக, சாச னத்தின் நாலாவது ஷரத்து ஆசைகாட்டுகிறது. 'சகல நாடுகளுக்கும்' என்பது சொல் அளவில்தான். சாசனம் பூராவுமே, உண்மையில் ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டும் தானே பிரயோகமாகப் போகிறது? உலகத்தின் பிற நாடு களின், முக்கியமாக இந்தியாபோன்ற கீழ் நாடுகளின், கதி என்ன? அவைகளும் உலக வர்த்தகத்திலும் மூலப் பொருள்களிலும் சமவசதிகளை உண்மையிலே அனுபவிக்க வேண்டுமென்றால், சர்வதேச வர்த்தகத் தடைகளையும் தீர்வைகளையும் சல்லிசு செய்வது மட்டிலும் போதாது; அவைகளின் கைத்தொழில்கள் வளர்ச்சியடையும் வழி களையும் கோலவேண்டும். இந்தியாபோன்ற தேசங்கள் எந்நாளும் ஏழை விவசாய நாடுகளாகவே இருந்து கொண்டு, அந்நியருக்குத் தங்கள் மூலப்பொருள்களைப்

பறிகொடுத்துக் கொண்டேதான் இருக்கவேண்டுமா? இவைகளுக்கும் பொருளாதார விமோசனம் உண்டு என்று யார் உத்தரவாதம் தருவது?

சாசனத்தின் ஐந்தாவது ஷரத்து, சர்வதேச ஒத்துழைப்பைப் பற்றிப் பிரஸ்தாபிக்கிறது. சர்வதேச ஒத்துழைப்பு என்றால் என்ன? இன்னொரு சர்வதேசச்சங்கமா? பழைய சங்கம் மாதிரியே அதுவும் பயனற்றுச் சக்தியற்று மடியாதபடி பார்த்துக்கொள்ள, புதிய ஏற்பாடுகள் எவையேனும் உண்டா? அப்படி ஒன்றையும் காணோம். ஆறாவது ஷரத்தோ, சாரமற்ற வெறும் சூத்திரமாகும். ஏழாவது ஷரத்துப்படி, எவரும் எவ்விதத் தடங்கலுமின்றிக் கடலெங்கும் சுற்ற உரிமை இருக்கவேண்டுமானால், அங்கங்கே பற்பல நாடுகளிலும் பிரவேசிக்கத் தடை இருக்கக்கூடாது. அம்மாதிரி தடைகள் இருந்தால், இந்த உரிமை அர்த்தமற்ற சொற்றொடராகும். கீழ் நாட்டாரை 'விரும்பத்தகாத அந்நியர்' என்று பாவித்துப் பலவிதத் தடைகளையும் நிர்ப்பந்தங்களையும் விதிக்கும் சட்டங்களை, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் செய்து வைத்திருக்கின்றனவே; அவைகளையெல்லாம் உடனே ஒழித்தால் அல்லவா, இந்த உரிமை பலன்தரும்?

பழைய கதை

கடைசி ஷரத்தை ஆராயுமுன்பாக, பழைய சரித்திர சம்பவத்தைப் பார்க்கவேண்டும். போன யுத்தத்தின் கடைசி நாட்களில், அமெரிக்க ஜனாதிபதியான உட்ரோ வில்ஸன், யுத்த சமாதானத்துக்குப் பதினாலு நிபந்தனைகள் கூறினார். அவை 'வில்ஸனின் பதினாலு பாயிண்டுகள்' என்று சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டன. அந்த நிபந்தனைகளை நிறைவேற்றினால், யுத்தமென்பதே இனி வராமல் செய்துவிடலாம் என்றெல்லாம் அப்போது சொல்லிக்கொண்டார்கள். அந்த நிபந்தனைகளின் சாராம்சம் வருமாறு:

1. பகிரங்கமாய்ப் பேச்சு நடத்தி, பகிரங்கமாய்ச் செய்துகொண்ட ஒப்பந்தங்களையன்றி, ரகஸ்ய ஒப்பந்தங்களை, எந்த நாடும் செய்து கொள்ளக்கூடாது.

2. கடல்களில் யாரும் செல்ல உரிமை இருக்க வேண்டும்.

3. சகலவிதமான பொருளாதாரத் தடைகளையும், சாத்தியமான மட்டில் நீக்கிவிடவேண்டும்.

4. உள் நாட்டுப் பத்திரத்துக்கு எவ்வளவு தேவையோ அதை அனுசரித்து, ஒவ்வொரு தேசத்தின் ஆயுதங்களையும் மிகக் குறைந்த அளவுக்குக் குறைத்து விடுவது.

5. காலனிகள் சம்பந்தமான சகல பாத்தியதைகளையும் பாரபட்ச மற்ற முறையில் தீர்த்துவைப்பது.

6. ருஷ்யாவின் பிரதேசங்களை யெல்லாம் ஜெர்மானியர் காலி செய்து விடவேண்டும்; தனது அரசியல் வளர்ச்சியைப் பற்றி, ருஷியா தன்னிச்சையாய் முடிவு செய்து கொள்ளவேண்டும்.

7. பெல்ஜியத்தை ஜெர்மானியர் காலி செய்து, அதற்குப் பழையபடி சுதந்தரம் கொடுத்து விடவேண்டும்.

8. ஜெர்மானியர் கைப்பற்றிய பிரஞ்சுப் பிரதேசங்களை யெல்லாம் காலி செய்து விடுவதுடன், அல்ஸேஸ்-லோரேனையும் அதற்குத் திருப்பிக் கொடுக்கவேண்டும்.

9. பிரதேச மக்கள் எந்தெந்தத் தேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை ஆதாரமாகக் கொண்டு, இதாலிய எல்லைகளைப் புதிதாய் வகுப்பது.

10. ஆஸ்திரியா - ஹங்கேரிக்குப் பூரண சுதந்தரம் அளிப்பது.

11. ருமேனியா, ஸெர்வியா, மாண்டினீக்ரோ ஆகியவைகளை ஜெர்மனி காலி செய்யவேண்டும். கடலுக்குப்போக, ஸெர்வியாவுக்கு வழி அளிக்கவேண்டும்.

பால்கன் நாடுகளுக்கு, சர்வதேச உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

12. துருக்கியில், துருக்கியர் இல்லாத பகுதிகளுக்குச் சுய ஆட்சி அளிப்பது. டார்டனல்ஸ் கடலில் சுதந்தரமாய் எந்தக் கப்பலும் செல்ல இடம் கொடுக்கவேண்டும்.

13. சுதந்தரமான போலந்து ராஜ்யம் ஒன்றை ஸ்தாபிப்பது. சர்வதேச ஒப்பந்தம் ஒன்றின் மூலம், அதற்கு உத்தரவாதம் அளிப்பது.

14. பற்பல நாடுகளும் ஒரு பொதுச் சங்கத்தில் சேர்ந்து, அந்தச் சங்கத்தின் மூலம், பெரிய நாடுகளுக்கும் சரி, சிறிய நாடுகளுக்கும் சரி, பரஸ்பர உத்தரவாதங்கள் அளிப்பது.

யுத்தத்துக்குப் பின்னல் வில்ஸனின், முதல் நிபந்தனைப் படி பகிரங்க ஒப்பந்தங்கள் நடந்தன என்றாலும், ரகஸ்ய ஒப்பந்தங்களும் நிற்கவில்லை. 3, 4, 5, 9-நிபந்தனைகள் நிறைவேற்றப்படவேயில்லை. மற்ற நிபந்தனைகள் மட்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. யுத்தம் முடிந்து, வெர்ஸேல்ஸ் சமாதான உடன்படிக்கையும் கையெழுத்தாயிற்று. ஜெர்மனியிடமிருந்த பற்பல பிரதேசங்களைப் பிய்த்துப் பற்பல நேச நாடுகளுக்கும் கொடுத்தார்கள். ஜெர்மனியின் ஆயுதங்களைப் பிடுங்கி, லட்சம் பேர் கொண்ட மிகச் சிறிய சேனையை மட்டிலுமே அது வைத்திருக்கும்படி செய்தார்கள். தான் ஒன்று மட்டிலுமே யுத்தத்துக்குப் பொறுப்பான குற்றவாளி என்று ஒப்புக் கொண்டு, அதற்கு அபராதமாகக் கோடி கோடியான பணத்தை அது நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றும் விதித்தார்கள்.

தோற்று நொடித்துப்போன ஒரு நாட்டிலிருந்து, அளவிட முடியாத அபாரத் தொகையை எப்படி வசூலிப்பது? அதை ஜெர்மனி வருஷத்துக்குக் கொஞ்சமாய்ப்

பற்பல வருஷங்களில் செலுத்தலாமென்று என்னென்னவோ 'டாவஸ் பிளான்' 'யங் பிளான்' எனவெல்லாம் திட்டங்கள் போட்டார்கள். ஒரு திட்டமும் பலிக்கவில்லை. ஜெர்மனி கையை விரித்து மக்கர்ப் பண்ணிவிட்டது. கடைசியில் 1932-ஆம்வூ யுத்தக் கடன் அடியோடு ரத்து ஆயிற்று.

ஒரு சர்வ தேசச் சங்கத்தை ஸ்தாபித்தார்கள். பற்பல நாடுகளும், அதற்கு ஏராளமான பணத்தை வரியாய்ச் செலுத்தின. ஆனல், உலக சமாதானத்தைக் காப்பாற்ற அந்தச் சங்கத்தினல் ஒரு காரியமும் ஆகவில்லை. அமெரிக்க ஜனதிபதி வில்ஸனின் முயற்சியால்தான் சர்வ தேசச் சங்கம் அமைந்தது. ஆனல், அந்த அமெரிக்காவே, ஆரம்பத்தில் கூடச் சங்கத்தில் சேரவில்லை. சங்கத்தில் சேருவதில்லை என்று அமெரிக்கக் காங்கிரஸ் தீர்மானம் செய்துவிட்டது. பின்னல், சங்கம் கூடிக்கூடி, வெறும் பேச்சுப் பேசியே கலைந்தது. மஞ்சூரியாவை 1932-ஆம் வருடம் ஜப்பான் விழுங்கியபோது. அதைத் தடுக்க, சங்கத்தால் முடியவில்லை. எதியோப்பியாமீது 1935-ஆம் வருடம் இத்தாலி பாய்ந்தபோது, திறமையான நடவடிக்கைகள் எடுக்க முடியாமல், சங்கம் தளுக்கு வேலை செய்து கொண்டிருந்தது. 1936-ஆம் வருடம் ஸ்பெயினிலே தளபதி பிராங்கோ எழுப்பிய கலகத்துக்கு இதாலியும் ஜெர்மனியும் பட்டவர்த்தனமாய் உதவி செய்தபோது, சங்கம் வாளா பார்த்துக் கொண்டிருந்தது. 1938-ஆம் வருடம் ஆஸ்திரியாவையும், 1939-ஆம் வருடம் ஜெக்கோஸ்லாவாகியாவையும் விழுங்கி, அதே வருஷம் போலந்து மீதும் ஜெர்மனி பாய்ந்தபோது, சங்கம் வாய்திறக்கவில்லை. ஆனல், 1939-ஆம் வருடம் டிசம்பர் மாதம் பின்லாந்து மீது ருஷியா போர் தொடுத்தபோது மாத்திரம் அதைக் கண்டித்து சங்கத்திலிருந்து ருஷியாவை விலக்கியதாகவும் ஒரு தீர்மானத்தைச் சங்கம் நிறைவேற்றியது. அதற்குப் பின், சங்கம்

கூடவேயில்லை. அதற்கு ஈமக்கடனாவது நடத்துவோரையும் காணேம்.

வில்ஸனின் பதினுலு நிபந்தனைகளையும் வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையையும் அனுசரித்து, பற்பல நாடுகளின் ஆயுதங்களையும் குறைக்க, ஆயுதப் பரிகரண மகாநாடு பல முறை கூடியது. அதன் பலனுக, ஆயுதங்களைக் குறைக்கும் நாடு எதனையும் காணேம். 'வில்ஸனின் வாக்குத்தத்தங்களை நம்பித்தான் நாங்கள் ஆயுதங்களைக் கீழே வைத்தோம். எங்களை ஏமாற்றி விட்டார்கள்' என்றெல்லாம் சொல்லி, ஜெர்மனி ரகஸ்யமாக ஏராளமான ஆயுதங்களைச் சேகரித்தது. நேச நாடுகளின் பல முதலாளிகளே, திருட்டுத்தனமாய் அதற்கு அநேக ஆயுதங்களை விற்பனையும் செய்தார்கள். வெர்ஸேல்ஸ் உடன்படிக்கையின் ஒவ்வொரு நிபந்தனையையும் ஜெர்மனி அடியோடு மீறியது. இவ்வாறு நிகழ்ந்த பற்பல அவந்தரைகளின் பலனுகவே, இந்த யுத்தம் மூண்டது.

கொஞ்சம் கூர்ந்து நோக்கினுல், வில்ஸனின் பதினுலு நிபந்தனைகளுக்கும், அட்லாண்டிக் சாசனத்துக்கும், அடிப்படையில் பெரிய வித்தியாசமில்லை என்று புலனுகும். சில அம்சங்களில், வில்ஸனின் நிபந்தனைகள் வியக்தமா யிருக்கின்றன; வேறு சில அம்சங்களில்,

இரண்டும் ஒன்றே

சாசனம் வியக்தமா யிருக்கிறது. மொத்தத்தில், ஐரோப்பிய சமாதானத்தையே இரண்டும் உட்கருத்தாகக் கொண்டு, பிரதேச சுதந்தரம், நாடுகளின் எல்லை நிர்ணயம், எதிரிகளின் ஆயுதப்பரிகரணம் ஆகியவைகளை வற்புறுத்துகின்றன. வில்சனின் நிபந்தனைகளோ, அட்லாண்டிக் சாசனமோ, புதிய உலகத்தைச் சிருஷ்டிக்க வழிகோலுபவை அல்ல.

இங்கே அட்லாண்டிக் சாசனத்தின் எட்டாவது ஷரத்தைப் பார்ப்போம். இந்த ஷரத்துக்கும், வில்ஸனின்

நாலாவது நிபந்தனைக்கும் ஒப்புமை சொல்லலாம். சற்றேறக்குறைய, இரண்டும் ஒன்றே தான். நாடுகளின் பரஸ்பர சந்தேகங்களாலும் சூழ்ச்சிகளாலும், சர்வதேச ஆயுதப் பரிகரண முயற்சிகளெல்லாம் ஏற்கெனவே வியர்த்தமாகி விட்டன. 'எங்களுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள். எங்களை ஏமாற்றிவிட்டார்கள்' என்றவாறெல்லாம் சொல்லி, ஜெர்மனி மறுபடியும் பிரமாதமாய் ஆயுதங்கள் சேகரித்துவிட்டது. சர்வ தேசங்களையும் ஆயுதப் பரிகரணம் செய்வதாய்ச் சொன்ன வில்ஸனின் நிபந்தனை தங்களை ஏமாற்றிவிட்டதென்றே, ஜெர்மானியர் சாக்குச் சொன்னார்கள். இந்த அட்லாண்டிக் சாசனமோ, எதிரிகளை அப்படி ஏமாற்றவில்லை; அவர்களை அடியோடு 'பல்லைப் பிடுங்கி' விடுவதாகச் சொல்கிறது. இது தான் வித்தியாசம். ஆனல், எதிரி நாடுகளிலே இருக்கக் கூடிய நிரபராதிகளான மக்களுக்கு இது நம்பிக்கை யூட்டக் கூடுமா? அவர்களின் ஆத்திரமன்றோ இதனல் அதிகரிக்கும். அன்றி, யுத்தம் முடிந்து சமாதான காலத்திலே, அவர்கள் மறுபடியும் ஆயுதம் திரட்டாமல், ஒரேயடியாக அவர்களை அமுக்கி வைத்துக் கொண்டிருக்கத் தான் முடியுமா? சுயநலப் பேராசை பிடித்த முதலாளிகள், அந்தக் காலத்திலும் நேச நாடுகளில் இருக்கத்தான் இருப்பார்கள். அவர்கள் திருட்டுத்தனமாய் அயல் நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்றுக் கொண்டேயு மிருப்பார்கள். நேச நாட்டு மக்களும் ராஜீயவாதிகளும் அரசாங்கங்களும், போர் முடிந்த ஆயாசத்தால் பெரு மூச்சோடு அப்போது ஓய்ந்து போயிருப்பார்கள். அவர்கள் இந்தப் பல தேச விவகாரங்களிலெல்லாம் தீவிரமாய்த் தலையிட்டுச் சின்னஞ் சிறு போரிலே தங்கள் நாட்டைச் சிக்கவைக்கக்கூட, மனமில்லாமல் இருப்பார்கள். மறுபடியும் பழைய கதை தான். பழைய சர்வதேசச் சங்கம் எப்படி மாய்ந்ததோ, பழைய ஆயுதப் பரிகரண மகாநாடுகள் எவ்விதம் வியர்த்த

மாயினவோ, அவ்வாறேதான் புதிய கதையும் நிகழும். வேறென்ன நடக்கும்?

இப்போதே, சர்ச்சில், ரூஸ்வெல்ட், ஸ்மட்ஸ் போன்ற ராஜ தந்திரிகள்—ஐக்கிய நாடுகளின் அதிகாரபூர்வமான தலைவர்கள்—பேசும் பேச்சுக்களிலே, செய்வதும் செய்யாததுமான செயல்களிலே, ஆணவப் பரவசம் தொனிக்கிறது; பிரதிபலிக்கிறது. யுத்தம் முடிந்தால்—ஐக்கிய நாடுகளுக்கு வெற்றியோடு முடிந்தால்—தோற்ற நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் அடிமை நாடுகளுக்கும் விமோசனம் கிடைக்குமா என்ற சந்தேகந்தான், அவர்களுடைய பேச்சுக்களாலும் செயல்களாலும் செயலின்மையாலும் பலப்படுகிறது.

யுத்த முடிவில் என்ன நடக்கும்?

சில வாரங்களுக்கு முன்னே, 25–11–43-ஆம் தேதியன்று, தென்னுப்பிரிக்கப் பிரதம மந்திரி தளபதி ஸ்மட்ஸ், யுத்தத்துக்குப் பிற்பாடு என்ன நடக்கப்போகிறது என்பதைப்பற்றி வெகு ஜோராய்ப் பேசியிருக்கிறுர். ஸ்மட்ஸ் சாமான்யப்பட்டவர் அல்ல. தென்னுப்பிரிக்காவிலே, மகாத்மா காந்தியோடு போராடி அவரைச் சிறையில் தள்ளி, அவரோடேயே பின்னுல் ராஜி செய்து கொண்டாரே அந்த ஸ்மட்ஸ்தான். பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சில், நாட்டை விட்டுச் சென்றபோது, ஆக்டிங் பிரதம மந்திரியாக யாரை நியமிப்பது என்று யோசனை வந்தது. அச்சமயம் இந்த ஸ்மட்ஸை நியமிக்கலாமே என்றுகூடப் பிரஸ்தாபம் வந்தது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலேயே அவ்வளவு செல்வாக்கு வாய்ந்தவர் ஸ்மட்ஸ். அவர் ஏதோ சொல்லுகிறுரென்றுல், அதை அலட்சியம் செய்து உதறித்தள்ள முடியாது. அவர் விஷயந் தெரியாத சாமான்ய ரல்ல.

ஸ்மட்ஸ் சொல்லுகிறார் :

"யுத்தத்துக்குப் பின்னே, **ஐக்கிய அமெரிக்கா,** ஐரோப்பாவின் புதிய பிரம்மாண்ட ராஜ்யமான **ருஷியா,** மேற்கு ஐரோப்பாவின் சிறிய ஜனநாயக நாடுகளோடு நெருங்கி இணைந்து பலம் பெற்ற **பிரிட்டன்** இந்த மூன்றுமே 'மும்மூர்த்தி'களாய் விளங்கப்போகின்றன......

"புதிய சர்வதேச அமைப்பின் தலைமை, இந்த 'மும்மூர்த்தி'களின் கையிலேயே தங்கியிருக்குமாறு நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

"யுத்தத்துக்குப் பின்னே, ஐரோப்பாவில் மூன்று பெரிய வல்லரசுகள் மறைந்துபோகும்......**பிரான்ஸ்** போயே போய்விட்டது; இனிமேல் நீண்ட காலம் வெகு கஷ்டப்பட்டுத்தான், அது மேலே வரமுடியும்...... பிரான்ஸ் போய்விட்டது; நம் வாழ்நாளில் அது மீளாது.

"**இதாலி** எத்தனையோ காலம்வரை மீளாதபடி அடியோடு மறைந்துவிட்டது. அது மீண்டும் ஒரு வல்லரசாக ஒருநாளும் வளரப்போவதில்லை.

"**ஜெர்மனி**யும் மறைந்துபோகும். மறுபடி ஒரு நாளும் பழைய ரூபத்தோடு அது தலையெடுக்கப்போவதேயில்லை.........

"ஆகையால், பிரிட்டனும் ருஷியாவுந்தான் மிச்சமாகும்......மற்ற நாடெல்லாம் விழுந்து மறைந்து, தான்மட்டும் ஐரோப்பாக் கண்டத்துக்கே எஜமானியாக, ருஷியா விளங்கப்போகிறது. அதன் சக்தி மகத்தானதுமட்டும் அல்ல, இன்னும் மகத்தானதாகிவிடும். ஏனெனில், **ஜப்பானிய ஏகாதிபத்தியம்** மறைந்துபோகும். கிழக்கே ருஷ்யாவுக்கு ஏற்பட்ட தடையும் போட்டியுமெல்லாம் மாய்ந்துவிடும்.........

"ஐரோப்பாவுக்கு வெளியிலே, உலகின் மகத்தான மற்றொரு வல்லரசாயிருக்கும் ஐக்கிய அமெரிக்காவும்

மிஞ்சும். ஐக்கிய அமெரிக்காவும் பிரிட்டனும் ஒன்ருய் இணைந்து, வருங்காலத்திலே புதியதொரு பாதையிலே நடக்கவேண்டும் என்று அநேகர் எதிர்பார்க்கிருர்கள். எனக்குமட்டில் அது விருப்பமில்லை.........ருஷியாவையும் அமெரிக்காவையும் பங்காளிகளாய்க் கொண்ட 'மும்மூர்த்தி'க் கூட்டுறவிலேயே, பிரிட்டன் ஒட்டிக் கொண்டிருக்கவேண்டும்......"

இவ்வாறெல்லாம் வருங்காலத்தைப் பற்றித் தம்முடைய ஆசைகளையும் தீர்க்கதரிசனங்களையும் கூறும் தளபதி ஸ்மட்ஸ், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதிக்கம், உலகத்தையே சீர்திருத்துவதற்காக, சென்ற ஆயிர வருஷங்களிலே காணப்படாத அபூர்வ முயற்சி என்று புகழ்கிருர். பிரிட்டனின் காலனிகளும், குடியேற்ற நாடுகளும் அந்த ஆதிக்கத்தை விட்டுச் சுதந்தரம் பெறவே கூடாதென்பது போல, அவர் பேசியிருக்கிருர். தளபதி ஸ்மட்ஸின் இந்தப் பேச்சு, ஆப்பிரிக்கா, துருக்கி, இந்தியா போன்ற நாடுகளிலே பயத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கி விட்டது. நாஜிகளின் ஆக்ரமிப்புக்கு உட்பட்டு, என்று விமோசனம் அடைவோம் என்று தவித்துக் கொண்டிருக்கக்கூடிய நிரபராதிகளான இதாலி, ஜெர்மன், பிரஞ்சு மக்களுக்கும் இது நம்பிக்கை ஊட்டுவதாயில்லை. ஜப்பானிய ஏகாதிபத்தியம் அழிவதால், ருஷியாவின் சக்தி மகத்தானதாகப் பெருகும் என்று ஸ்மட்ஸ் சொன்னுரேயொழிய, சீன புத்துயிர் பெற்றெழும் என்று சொல்ல அவருக்கு நா எழவில்லை. 'மும்மூர்த்தி'க் கூட்டுறவிலே, நாலாவது மூர்த்தியாக இடம் பெற வேண்டாம் சீன; புத்துயிராவது பெறக்கூடாதா? சீனவிலே 45 கோடி பவுனை பிரிட்டிஷாரும், 40 கோடி டாலரை அமெரிக்கரும் போட்டிருக்கிருர்களாம். சீன மார்க்கட்டைக் கைப்பற்றுவதில், ஜப்பானுக்கும் மேல் நாடுகளுக்கும் பிரமாதமான போட்டியும் பொருமையும் இருந்து வந்தன. யுத்தத்துக்

குப் பின்னே ஜப்பான் தொலைந்து விடுமாதலால், மேல் நாடுகளுக்கு ஏகபோக மார்க்கட்டாகவே சீனா விளங்கப் போகிறதா? தளபதி ஸ்மட்ஸ் இதை ஏன் கொஞ்சம் விளக்கி யிருக்கலாகாது?

இவ்வளவு மோசமில்லை ஜனாதிபதி ரூஸ்வெல்டின் பேச்சு. 1943-ஆம் ௵ டிசம்பர் ௴ கிறிஸ்மஸ் பிரசங்கம் செய்கையில், அவர் கூறுகிறார்:

> "ஜெர்மன் மக்களை அடிமைப்படுத்த, ஐக்கிய நாடுகளுக்கு உத்தேசமில்லை. ஐரோப்பியக் குடும்பத்தில் உபயோகமுள்ள, கௌரவமான உறுப்பினர்களாக அவர்கள் வளர்ச்சி எய்த இயல்பான சந்தர்ப்பத்தை அவர்களுக்கு வழங்கவே நாங்கள் விரும்புகிறோம். ஆனால், நாஜீயத்தையும், பிரஷ்ய ராணுவத் திமிரையும், தாங்கள் ஏதோ 'எஜமான் ஜாதி' என்று அவர்களுக்குள்ள விசித்திர எண்ணத்தையும், அவர்களிடமிருந்து பறித்துவிட நாங்கள் உத்தேசித்துள்ளோம்......
>
> "பஸிபிக்கிலும் பிற உலகிலும் பூர்ண சமாதானமும் ஏற்படுவதற்கு, ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை நிரந்தரமாய் ஒழித்து விடுவது அவசியமாகும். அந்த ஏகாதிபத்தியம், என்றேனும் ஒரு நாள் ஆக்கிரமிப்பில் இறங்கக்கூடிய ஒரு சக்தியாயில்லாதபடி, அதை ஒழித்து விட வேண்டும்."

ரூஸ்வெல்ட் பேச்சின் சாரமெல்லாம் இவ்வளவுதான்: ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை ஒழிக்கவேண்டும்; ஜெர்மன் ராணுவ பலத்தை அழிக்கவேண்டும்—இதோடு சரி. உலகமெங்கும் போரொழிந்து சமாதானம் தழைக்கும் புதிய யுகம் ஒன்றை வரவேற்க இவ்வளவு போதுமா?

அட்லாண்டிக் சாசனமும் சரி, அதற்குப் பின்னே பிறந்த கெய்ரோ, டெஹ்ரான் அறிக்கைகளும் சரி, அவைகளை யொட்டி ஐக்கிய நாட்டுத் தலைவர்கள் செய்த

பிரசங்கங்களும் சரி—அத்தனைக்கும் அடிப்படையான நோக்கம் ஒரே ஒன்றுதான்: போரிலே எப்படியாவது வெல்ல வேண்டும், போருக்குப் பின்னே ஜயசீலர்களான ஐரோப்பிய தேசங்களும் அமெரிக்காவும் உலகத்துக்கே தலைமை தாங்கவேண்டும் என்பதுதான் அந்த நோக்கமாகும். இந்தக் காரியங்களால், உலகத்திலே நிரந்தரமான சமாதானம் ஸ்தாபிதமாகிவிடுமா? உலக மக்களுக்கெல்லாம் பத்திரமும் சுதந்தரமும் உண்டாகிவிடுமா?

சமாதானத்துக்கு வழி

சமாதானம் என்பதுதான் என்ன? அது ஏதோ உலகின் இயற்கையான ஒரு நிலை என்று நம்மில் பலர் கருதுகிறோம்; காலத்துக்குக் காலம் ஒரு செங்கிஸ்கான், ஒரு நெப்போலியன், ஓர் அலெக்ஜாந்தர், ஒரு கெய்ஸர் ஆகியவர் தோன்றி, அந்தச் சமாதான நிலையைப் பங்கம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் நினைக்கிறோம். ஆனால், உண்மை அதுதானா? இல்லவே யில்லை என்கிறார் டாக்டர் ஜி. பி. பிட்டெர் என்ற அறிஞர். அவர் சொல்லும் சில அற்புதமான கருத்துக்கள் வருமாறு:

"இயற்கையிலே சமாதானம் என்பது கிடையாது; மனிதனுடைய ஞானத்தினால் படைக்கப்பட்ட மகோன்னதமான ஒரு சிருஷ்டி அது. இயற்கையிலே, பட்டுப் பூச்சியைச் சிட்டுக்குருவி விழுங்குகிறது; அந்தச் சிட்டுக் குருவியையோ, கொட்டைப் பிராந்து கொத்திவிடுகிறது. ஆடுமாடுகளும் குழி முயல் குட்டிகளும், பசும்புல்லுக்காக ஒன்றோடொன்று போராடுகின்றன. மரங்களின் வேர்கள்கூட, ஓயாத போர் நடத்தியே பூமியிலே ஓடுகின்றன. 'கெய்ஸரை ஒழிப்போம், ஜெர்மன் சேனைகளை அழிப்போம், ஹிட்லரைத் தொலைப்போம், நாஜிகளை நசுக்குவோம்; இதனாலெல்லாம் சமாதானம் கிடைத்து விடும்' என்று மீண்டும் பாசாங்கு செய்யும் முட்டாள் தனத்தை

நாம் கைவிடவேண்டும். பசும்புல் வெளியிலிருந்து, மாட்டு மந்தையை, குழி முயல் குட்டிகள் விரட்டிவிட்டால், உடனே சமாதானம் வந்துவிடாது; யார் உண்டு செழிப்பது, யார் பட்டினியால் வாடுவது என்று அந்த முயல்களுக்குள்ளேயே ஒரு யுத்தம்தான் கிளம்பும். நமது மனம் விசாலமாயிருந்தால், நமது லட்சியம் புத்திசாலித்தனமாயிருந்தால், நம்மிலே மிகச் சிறந்த மனிதர்கள், உலகத்திலே ஒரு புதிய ஒழுங்கை நிலைநாட்டி, அதற்குச் சமாதான வாழ்வையும் அளிப்பார்கள். அந்தச் சமாதான வாழ்வினல், ஒவ்வொரு மனிதனுடைய உழைப்பின் மதிப்பும், இன்ப நேரமும், விஞ்ஞான வளர்ச்சி வேகமும், வாழ்க்கையின் பெருமையும், மும்மடங்காகப் பெருகிவிடும். இந்த வருஷமோ, அடுத்த வருஷமோ, நூறு வருஷத்திலோ, அல்லது ஆயிரம் வருஷத்திலேதானே, இந்த நிலைமையை அடைந்தே தீருவோம். போரிலே அடையும் ஜயத்தினலோ, எதிரியை அடியோடு அழிப்பதனலோ, சமாதானத்தைச் சம்பாதிக்கமுடியாது. இப்போது, யுத்தக் கலையைப் பரிபூரணமாய்ப் பக்குவம் செய்வதற்காக, என்னென்ன முயற்சிகளோ செய்கிருேமல்லவா? அது போலவே, சமாதானத்தையும் யுக்தியாய்க் கண்டுபிடிக்க வேண்டும்; நிர்மாணம் செய்யவேண்டும்; அளவிறந்த முயற்சி எடுத்துப் பாதுகாக்கவேண்டும்.''

மனிதகுலத்தின் சரித்திரத்தை நாம் ஆதியிலேயிருந்து கவனித்தால், அது என்றும் ஒரு பெரியபோராட்டமாகவே இருந்திருப்பது புலனுகும் — நன்மைக்கும் தீமைக்கும் போராட்டம். ஆத்மீக வாழ்விலே, தார்மிகப் பாதையிலே முன்னேறுவதற்கான போராட்டம் என்றே அதைச் சொல்லவேண்டும். எச். ஜி. வெல்ஸின் உலகசரித்திரச் சுருக்கத்தைப் படித்துப் பார்ப்போமானல், ஒவ்வொரு படியிலும், மனிதன் மேலும் மேலும் குணத்திலும் அறிவிலும் சிறந்தோங்கவே முயன்றிருக்கிருன் என்று தெளிவாய்ப் புலனுகும். விஞ்ஞானிகள் எல்லாரும் ஒப்புக்

கொண்ட டார்வின் சித்தாந்தம் உண்மையானுல், குரங்கிலிருந்தல்லவா மனிதன் வந்திருக்கிருன்; குரங்கல்லவா முயன்று முயன்று பக்குவமடைந்து, அறிவுத் தெளிவும் குணவளர்ச்சியும் உருவத்திரட்சியும் பெற்று மனிதனுக உயர்ந்திருக்கிறது? மனிதன் இன்றுள்ள வளர்ச்சியைப் பெற்றிருப்பது சாத்தியமானுல், அவன் இன்னும் மேலான வளர்ச்சியடைந்து, தேவசம்பத்தைப் பெறுவதும் சாத்தியமே யல்லவா?

மனிதனுடைய சிருஷ்டி சக்தி எவ்வளவோ பிரம்மாண்டமாய் வளர்ந்திருக்கிறது. அதையெல்லாம் நாசத்துறையிலே அவன் பிரயோகிக்கிருன். போட்டியும் பொருமையும், துரோகமும் குரோதமும்தான் அதற்குக் காரணம். அந்தத் தீயகுணங்களை அகற்றுவதற்குரிய சந்தர்ப்பங்களை நாம் ஏற்படுத்திப் பெருக்கவேண்டும். இந்த யுத்தத்தின் மூலகாரணம்—ஏன், எந்த யுத்தத்தின் மூலகாரணமுமேதான்—யாது? பசித்தவனுக்கும் பசியாதவனுக்கும், உள்ளவனுக்கும் இல்லாதவனுக்கும், நொடித்தவனுக்கும் செழித்தவனுக்கும், தோற்றவனுக்கும் வென்றவனுக்கும் யுத்தம் மூளுகிறது. ஆனுல், பற்பல சிக்கல்கள் நிறைந்த மனித வருக்கத்தின் வாழ்க்கையிலே, யார் யார் இன்னின்ன கட்சி யென்று தெரியாதபடி ஒரு குழப்ப மாகவே போராட்டம் நடக்கிறது. அறியாமை, அறிய முடியாமை, சூழ்ச்சி, கலகம், துன்பம், பயம் இவையெல்லாம் அதற்கு ஊட்டம் அளிக்கின்றன.

இன்று நடக்கும் யுத்தத்தை ஓர் உலகப் புரட்சியென்றே பல அறிஞர்கள் கருதுகிருர்கள். உலகம் முழுவதையும் ஒன்ருய் இணைக்கும் கப்பல், ரயில், விமானம், ரேடியோ போன்ற பற்பல அற்புத சாதனங்களை மனிதன் படைத்துவிட்டான். புதுமை புதுமையான போக பாக்கிய இன்பப் பொருள்களை யெல்லாம், அவன் படைத்துவிட்

டான். ஆனல், அவைகளை அனுபவிப்பதிலே, ஓர் அராஜக அலங்கோலம் நிலவுகிறது. மனித சமத்துவமென்ற உன்னத தத்துவத்தை நிலைநாட்ட முடியாதபடி, விசேஷ உரிமைகள் குறுக்கே நிற்கின்றன. அவைகளையெல்லாம் பறித்தெறியவேண்டும். அதற்கு லாந்தர்க் கம்பங்களை உடைக்க வேண்டியதில்லை; தடிகளை எடுக்க வேண்டியதில்லை; ஹிம்சையையும் குரூரத்தையும் கைக்கொள்ள வேண்டியதுமில்லை. தர்ம நியாயம் வேண்டும்; அன்பு நிறைவு வேண்டும்; மனோ விசாலம் வேண்டும்; உன்னத லட்சியம் வேண்டும்; மனித குலம் முழுவதையும், கருப்பன் – வெள்ளையன், ஐரோப்பியன் – மற்றவன், அவன் – இவன் என்ற வேற்றுமை யின்றி, சமமாய்ப் பாவிக்கும் சமதர்சனம் வேண்டும். அட்லாண்டிக் சாசனம் இதில் எந்த லட்சணத்தையாவது பெற்றிருக்கிறதா; எந்தத் தத்துவத்தையாவது உள்ளடக்கிக் கொண்டிருக்கிறதா? பழைய 'அடிமை'களுக்கு, அதில் விமோசனமில்லை; அது அபயமளிக்கவில்லை. புதிய 'அடிமை'களை, நிர்க்கதியான மக்களை, அது சிருஷ்டிக்கவே போகிறது. என்ன லாபம்?

புதிய சீனு

"உலகத்திலேயே பகைவருக்கு நகைமுகங்காட்டி, நல்வரவு கூறி, அவர்களைத் தங்களிடம் ஐக்கியப்படுத்திக்கொண்டு விடுகிற சக்திவாய்ந்த தாய்மார் இருவர், வாழ்க பாரதமாதா! வாழ்க சீனத் தாய்!

இந்தியாவும் சீனுவும், பூமிதேவியின் மூத்த பெண்கள்; இரட்டைக் குழந்தைகள். இவ்விருவரும் அழியாத கன்னியர்; குன்ருத வனப்பினர். குறையாத வளத்தினர். இவர்கள், எத்தனையோ நாடுகளுக்கு நாகரிகப் பால் புகட்டினுர்கள்; எத்தனையோ இடங்களுக்கு ஞான விளக்கை ஏந்திச் சென்ருர்கள். நாகரீகத்தையும் ஞானத்தையும் மட்டுமா கொண்டு சென்ருர்கள்? இல்லை, இல்லை; உணவையும் உடையையும் கூடக் கொண்டு சென்ருர்கள். மற்றவர்களுடைய வந்தனத்தையோ நன்றியையோ எதிர்பார்த்து இவர்கள் இங்ஙனம் செய்யவில்லை; தங்கள் கடமையாகக் கருதியே செய்தார்கள்.

இன்று உலகத்தில் சத்தியமென்றும், தருமமென்றும் பேசப்படுகிறதென்று சொன்னுல், அவை யாவும் இந்த இரண்டு நாடுகளிலிருந்து பிறந்தவைதான். யந்திர நாகரிக வெறி முற்றியுள்ள இந்த இருபதாவது நூற்ருண்டிலே மேற்படி சத்தியத்திற்கும் தருமத்திற்கும் மதிப்பு வைத்துப் பேசுவது இந்த இரண்டு நாடுகளுந்தான். சத்தியத்தையும், தருமத்தையும், தாங்கள் கவசமாக அணிந்து கொண்டிருக்கிற வரையில் தங்களுக்கு அழிவே கிடையாது என்ற திடமான நம்பிக்கையுடனிருப்பதும் இந்த இரண்டு நாடுகளுந்தான்.

ஆனுல்—இந்த ஆனுல் என்ற வார்த்தையை நாம் மிகுந்த மனவேதனையுடனேயே உபயோகிக்கிருேம்—இவ்விரண்டு நாடுகளும் எவ்வளவுக்கெவ்வளவு அமைதியிலேயே இன்பம் துய்த்து வந்தனவோ, துய்க்கும் ஆற்றல் பெற்றிருந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு யுத்தச் சுழலில் அகப்பட்டுக்கொண்டு அமைதியை இழந்து நிற்கின்றன. இப்படி அமைதியை இழந்து நிற்கின்ற காலத்திலும், ஒன்றுக்கொன்று அநுதாபத்தோடு பார்த்துக் கொள்கின்றன. இரண்டு நாடுகளுக்கும் பரம்பரையான தொடர்புண்டல்லவா? நெருங்கிய நட்பு உண்டல்லவா? உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் சீனுவே! உரிமைக்காகப் போராடிவரும் இந்தியா, தனது மனப்பூர்வான அநுதாபத்தை உனக்குத் தெரிவிக்கிறது."

இப்படி "புதிய சீனு" புத்தகத்தில் சர்மாஜீ ஆரம்பிக்கிருர்.

புத்தகம் விரைவில் வெளிவரும்

சக்தி வெளியீடு

சக்தி வெளியீடுகள்

சோவியத் ருஷ்யா	வெ. சாமிநாத சர்மா	3	8	0
கார்ல் மார்க்ஸ் (சரித்திரம்)	,,	3	0	0
ரூஸ்ஸோ (சரித்திரம்)	,,	1	12	0
காந்தியும் ஜவஹரும்	,,	0	8	0
ருஷ்யக் கதைகள்	எம். எல். சபரிராஜன்	4	0	0
போரும் காதலும் (நாவல்)	டால்ஸ்டாய் முதல் பாகம்	3	0	0
சத்திய வேட்கை (கதை)		0	8	0
நிழல்கள் (நாடகம்)	அ. சீனிவாசராகவன்	1	8	0
கூளப்ப நாயக்கன் காதல்		1	4	0
திருமலைப் பள்ளு		2	0	0
ஆறடி நிலம் (கதைகள்)		0	6	0
அபேதவாதம்	ராஜாஜி	0	8	0
கீதா போதனை		0	4	0

ஆங்கில வெளியீடுகள்

Strange Journey,	Harindranath Chattopadhyaya (Poems)	2	8	0
Five Plays,	,, (Plays)	1	4	0
Lyric Festoons,	V. RM. Chettiar	1	0	0
Talk for Food,	S. Gopal & V. Abdulla	0	10	0
Angry Dust,	Manjeri S. Isvaran	2	0	0
The Essentials of Gandhism	V. Swaminatha Sarma	0	12	0

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்) சென்னை.

சக்தி மலர்

மாதம் ஒரு புத்தகம்

அரசியல், பொருளாதாரம், சயன்ஸ், கதை, கட்டுரை, கவிதை, இலக்கியம், சரித்திரம், வேதாந்தம், அயல் நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில்—இவைகள் தனித்தனியே ஒவ்வொரு தமிழ் மாத முதல் வாரத்திலும் வெளிவரும், [ஆங்கிலத்தில் வெளியாகும் 'பெங்குவின்', 'பெலிகன்' மாதிரி இருக்கும்.]

[இதுவரை சக்தி மலரில் 28 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. விலைப் பட்டி தேவையானவர்களுக்கு இலவசமாக அனுப்பிக்கப்பெறும்.]

அரசியலிலே பல கிளர்ச்சிகள், இலக்கியத்திலே புது நூல்கள், சமூகத்திலே சீர்திருத்தங்கள், கதையிலே மறுமலர்ச்சி — இப்படி யெல்லாம் எத்தனையோ இயக்கங்கள், நம்மிடம் ஏற்பட்டு விட்டதாக நாம் ஆனந்தக்களிப் பெய்துகிறோம். ஆனால் எந்தத் துறையிலாயினும் உண்மையிலே முன்னேறியிருக்கிறோமா? துளியும் இல்லை. **நமது பிற்போக்குக்கு** என்ன காரணங்கள்? அவைகளை யெல்லாம், சக்தி மலரில் 29-வது புத்தகமாக வெளிவரும் **'நமது பிற்போக்கு'** எனும் புத்தக மூலம் நிர்த்தாட்சண்யமாய் விளக்குகிறார் வெ. சாமிநாத சர்மா.

ஒவ்வொரு சக்தி மலரும் **விலை ஒரு ரூபாய்.** தபால் செலவு **மூன்றணா.** பத்து மலர்களுக்குச் சேர்த்து ஒரே தடவையில் ரூபாய் **பத்து** அனுப்புகிறவர்களுக்கு தபால் செலவின்றி அனுப்பிக்கப் பெறும்.

சக்தி காரியாலயம்

261, சைனாபஜார், சென்னை

சக்தி மாத வெளியீடு

கட்டுரை, கவிதை,
- கதை, ஓவியம் -
இவைகளைக் கொண்டு
ஒவ்வொரு ஆங்கில
மாதமும் வெளிவருகிறது

வருட சந்தா ரூ. ஆறு
ஆறு மாதம் ,, மூன்று

சக்தி காரியாலயம்

115-E, மோபரீஸ் ரோடு
ராயப்பேட்டை :: சென்னை

சக்தி பிரஸ் லிமிடெட், (சாந்தி பிரஸ்) சென்னை.